**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(09.09.2015 முதல் 13.09.2015)**

**அறிக்கை எண் 70/2015** **தேதி: 08.09.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 37°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 22°செ முதல் 28°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசான மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (09.09.2015 முதல் 13.09.2015)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 73-76 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 64-69 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 09.09.15 | 4 | 33 | 24 | 6 | 74 | 69 | 12 | தெற்கு |
| 10.09.15 | 4 | 33 | 24 | 6 | 75 | 68 | 12 | தெற்கு |
| 11.09.15 | 4 | 33 | 24 | 6 | 76 | 67 | 12 | தெற்கு |
| 12.09.15 | 3 | 33 | 24 | 6 | 74 | 65 | 12 | தெற்கு |
| 13.09.15 | 3 | 33 | 24 | 6 | 73 | 64 | 12 | தெற்கு |

## வேளாண் அறிவுரை

- ✓ வரும் ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கபடுகிறது. வட கிழக்கு பருவ மழை கால விதைப்பிற்கான நிலங்களை தயார் செய்யவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் இறவை மரவள்ளி கிழங்கு நடவு செய்வதற்கு இதுவே உகந்த தருணமாகும். நடவு செய்யும் மரவள்ளிக்கிழங்கின் கரணைகள் 15 செ.மீ நீளமும் 8 முதல் 10 கணுக்கள் உள்ளனவாகவும், மேலும் தண்டின் நடுப்பகுதியில் வெட்டப்பட்டவையாகவும் இருக்க வேண்டும். கரணைகளை நடவு செய்வதற்கு முன்பு 1 கிராம் கார்பன்டசிம் மருந்தினை1 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நிமிடம் ஊற வைக்கவும்.
- ✓ மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 12கிமீ அளவில் வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களான வாழை மற்றும் கரும்பு பயிர்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ போதிய அளவு செடிகளை பராமரிக்க இறவை பருத்தி மற்றும் மக்காச்சோள பயிரில் அதிகமாக உள்ள செடிகளை கலைத்து முளைக்காத இடங்களில் விதைக்கவும்.

## குறுஞ்செய்தி

- ✓ வரும் ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கபடுகிறது. வட கிழக்கு பருவ மழை கால விதைப்பிற்கான நிலங்களை தயார் செய்யவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.